செய்தி வெளியீடு எண்: 161/2018 நாள்: 19.03.2018

**வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள காயிதே மில்லத் அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலப்பட்டா, புதிய குடும்ப அட்டை, பட்டாமாறுதல், வேலைவாய்ப்பு, கடனுதவி, நிதியுதவி, இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை, காவல்துறை பாதுகாப்பு, மின் இணைப்பு மற்றும் பொதுநல மனுக்கள் என **391** மனுக்களை வழங்கினர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இக்குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில் பார்வையற்றவர்கள் 5 அடி தூரம் முன்னேற மேடு பள்ளங்களை எச்சரிக்கை செய்யும் மற்றும் இரவு நேரங்களில் எதிரே வருபவர்களுக்கு வெளிச்சம் மூலம் தெரிவிக்கும் வண்ணம் தலா ரூ.3269/- மதிப்பிலான நவீன ஊன்றுகோலினை 10 பார்வையற்ற மாணவ மாணவிகளுக்கும், தலா ரூ.6400/- மதிப்பிலான மூன்று சக்கர நாற்காலிகளை 6 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு, 32 மாணவ மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும் தாட்கோ மூலம் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதித் திட்டத்தின் கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற இயலாத ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், குணப்படுத்த இயலாத நோயினால் பாதிக்கப்பட்டோர் என 14 நபர்களுக்கு சுயதொழில் தொடங்க தலா ரூ.20 ஆயிரம் வீதம் 8 நபர்களுக்கு ரூ.2,80,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பிலான காசோலைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும் தேசிய நதிகளை இணைக்க வலியுறுத்தி காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை 3715 கி.மீ. 15 நாட்களில் சைக்கிள் ஓட்டி சென்று சாதனை புரிந்தமைக்காக வேலூர் மாவட்டத்தை சேர்ந்த திரு.நரேஷ்குமார் அவர்கள் இந்திய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சான்றிதழ் மற்றும் கேடயத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களிடம் காண்பித்து வாழ்த்துக்களை பெற்றுக்கொண்டார். பள்ளிகொண்டா பேரூராட்சியில் பணிக்காலத்தில் மரணமடைந்த செயல் அலுவலர் திரு.பா.பாஸ்கரன் என்பவரின் மகன் திரு.பா.குமரேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் திமிரி பேரூராட்சியில் வரித்தண்டலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், உதவி ஆட்சியர் பயிற்சி திரு.ஸ்ரீகாந்த், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.கஜேந்திரன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் துறை) திருமதி.பேபிஇந்திரா, தாட்கோ பொது மேலாளர் திருமதி.வேதசுந்தரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செந்தில்குமாரி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.திருஞானம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக வேலூர் மண்டல பொது மேலாளர் திரு.ரமேஷ், வணிக மேலாளர் திரு.தசரதன் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

for செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.